கூட்டங்களில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி இருந்தால் நல்ல அறிவுரை பெறலாமென்ற காரணத்தால்தான் இந்த எண்ணத்தை நான் தெரிவிக்கிறேன். இந்த யோசனையை ஏற்று அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள்—அதிகாரிகள் தவிர மற்றவர்கள், தென் இந்திய தொழில் வர்த்தக சபை மற்றும் சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத் தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் சிறந்த ஆலோசனைகளை இந்த அரசுக்குச் சொல்லுகிறார்கள். இந்தக் குழுவில் இருந்துதான் ஆலோசனை சொல்ல வேண்டுமென்று இல்லை. வெளியிலே இருந்துகூட ஆலோசனைகளை எழுத்து மூலமாகச் சொன்னாலும் அல்லது அமைச்சரிடத்தில் சொன்னாலும், அல்லது தொழிற்துறைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் சொன்னாலும், எப்படிப்பட்ட இடத்திலிருந்து ஆலோசனைகளைத் தந்தாலும் இந்த அரசு நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 373, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. து. மூர்த்தி கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

373-

நன்னிலம் பனங்குடியில் சுத்திகரிப்பு ஆலையில் உபதொழில்கள் தொடங்குதல்.

***24166-டாக்டர் க. கோபால்* :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நன்னிலம், பனங்குடியில் இயங்கவுள்ள சென்னை சுத்திகரிப்பு ஆலையின் மூலம் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு உப தொழில்கள் தொடங்க அரசிடம் ஏதும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) பனங்குடியில், எம்.ஆர்.எல். நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் கச்சா பெட்ரோலியம் வடிப்பாலையில் கிடைக்க உள்ள நாஃப்தாவைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 1500 டன்கள் மொத்த உற்பத்தித் திறனுடன் நைட்ரோ பாஸ்பேட் மற்றும் கால்ஷியம் அம்மோனியம் நைட்ரேட் (உரங்கள்) உற்பத்தி செய்யும் வளாகம் ஒன்றினை கடலூருக்கு அருகில் அமைத்திடவும் இத்திட்டத்தை இணைத் துறையில் (Associate Sector) செயல்படுத்தவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தீர்மானித்துள்ளது. பனங்குடி எம்.ஆர்.எல். ஆலையில் கிடைக்கவுள்ள எரி எண்ணெய்யையும் மேற்கண்ட உர உற்பத்தித் திட்டம் பயன்படுத்திக் கொள்ளும்.

முற்பகல் 10-30

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே கிடைக்கின்ற கச்சாப் பொருட்களை வைத்து, 20 உப தொழில்கள் கடலூரில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். எங்கள் நாகை மாவட்டத்தில் இருக்கிற அத்தனை தொகுதிகளும் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். அப்படி, அந்தக் கச்சாப்பொருட்களைக் கொண்டு 20 உபதொழில்களை, நன்னிலம் பகுதியில் தொடங்கினால் அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிற நிலை ஏற்படும். மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் அந்தப் பகுதியில் கொஞ்சம் குறைவதற்கு வசதியாகவும் இருக்கும். அதனால் படித்த இளைஞர்கள் பயன்பெறுகிற நிலையும் ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலூரில் அப்படி ஆரம்பிக்க இருக்கிற அந்த நிறுவனங்கள் குறித்துப் பரிசீலனை செய்து எங்கள் பகுதியான நன்னிலம் அல்லது நாகை பகுதியில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 உரத் தொழிற்சாலைகள் அமைக்கவேண்டும் என்று சொன்னால் அதற்குப் பக்கத்தில் துறைமுக வசதி இருக்கவேண்டும். அதற்கு கடலூர்தான் சிறந்த இடம் என்று ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு, அந்த வேலைகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால், உறுப்பினர் சொல்கிற அந்த இடத்தில் துவங்க பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் முட்டத்தில் உள்ள எம்.ஆர்.எல். மற்றும் சில பெரிய தொழில்கள் நடக்கின்ற அந்த இடத்தில் கிடைக்கின்ற மூலப்பொருளான கச்சாப் பொருளை எடுத்துக்கொண்டு, கடலூருக்குச் சென்று அங்கே அதை செயல்படுத்தலாம் என்று சொன்னார்கள். நாகை மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கு, கோத்தாரி, எம்.ஆர்.எல். போன்ற பேக்டரிகள் இயங்கும்போது நாகை நகரம் அழகாகத் திகழும். அப்படிப்பட்ட அழகு பொருந்திய நாகப்பட்டிணத்தில் கிடைக்கின்ற கச்சாப் பொருள்களைக் கொண்ட உப தொழில்களுக்குத் தேவையான துறைமுகம் அங்கேயே இருக்கிறது. ஆகவே, கடலூர் திட்டத்தை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் மாற்றி, நாகைக்கே அதைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தத் தொழிற்சாலைகள் கடலூரில் தொடங்கப்படும் என்று அரசு அனுமதி அளித்து அதற்கு உண்டான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அதை மீண்டும் நாகைக்கு மாற்றினால் கடலூர்க்காரர்கள் கலவரத்திற்கு வந்துவிடுவார்கள். ஆகவே, அந்த யோசனை இப்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 374, திரு. செ.து. வரதராஜன்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

374–

நோயுற்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்குப் பண உதவி வழங்குதல்.

***15244**-திரு. செ. து. வரதராஜன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோயுற்ற ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்காக பண உதவி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,